**தலைப்பு 103 – பாதுகாப்பு அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாதுகாப்பு அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்டோபர் 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாதுகாப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வைப்புக்கள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக்களின் கொடுப்பனவு மற்றும் மீதிகளைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டு காலப்பகுதியில் வைப்புக்களின் பெறுவனவு மற்றும் வைப்புக்களின் கொடுப்பனவு மீதிகள் தொடர்பாக அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் காணப்படுகின்ற மீதிகளுக்கும், திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் (SA30) காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையிலான வேறுபாடு கட்டுநிதி சீராக்கல் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும். | பெறுவனவுகளிதும் கொடுப்பனவுகளினதும் ஒட்டுமொத்த பெறுமதிக்கான வேறுபாடு இரண்டு சந்தர்ப்பங்களின் போதும் சமமான பெறுமதியைக் கொண்டிருந்தமையினால் கட்டுநிதி சீராக்கல் கணக்கில் ஒட்டுமொத்த தாக்கம் ஏற்படவில்லை. | சரியான பெறுமதியின் அடிப்படையில் சீராக்கி கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனினும், கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் பிரகாரம் அவ்வாறு மாற்றப்பட வேண்டிய பெறுமதிக்கும் கட்டுநிதி சீராக்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த மீதிக்கும் இடையே ரூபா 32,628,000 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 79 ஒப்பந்த பணிகளுக்குரிய ரூபா 470,693,653 தொகையான ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணம் காணப்பட்டதுடன், அதில் ரூபா 231,094,300 தொகை இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்டது. மேலும் அதில் ரூபா 88,382,691 தொகைக்குரிய 12 ஒப்பந்த பணிகள் முடிவடைந்திருந்த போதும், அதில் ரூபா 48,362,756 தொகை 2021 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் அந்த நிர்மாணங்கள் தொடர்பான குறைபாடுகளை இனங்கண்டு அறவிடுவதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பு இராணுவ தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தற்போது அமுல்படுத்தப்படுகின்றமை யினால் அந்த நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு தகைமை பெற்று அங்கீகாரத்தை பெற்றதன் பின்னர் விடுவிக்கப்பட முடியும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி அச்சிடல் குறிப்பினதும், நிதிச் செயலாற்றல் கூற்றினதும் பிரகாரம் காண்பிக்கப்படுகின்ற மீளாய்வாண்டில் சொத்துக்கள் கைப்பற்றல்களின் பெறுமதி ரூபா 4,405,767,263 ஆக இருந்த போதிலும், நிதி அல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-6 படிவம்) அப்பெறுமதி ரூபா 28,299,595 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 4,377,467,608 வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் சில கொள்வனவுகள் ஆரம்ப மீதியாக உள்ளடக்கப்பட்டமை மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்கப்பட்டமை, காணப்படுகின்ற கட்டிடங்களுக்காக கொள்வனவு செய்தல் இணைய தள முறைமையின் கீழ் உள்ளடக்குவதற்கான வசதிகள் காணப்படாமை, நிர்மாண செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் CIGAS நிகழ்ச்சித் திட்டம் ஊடாக கணக்கீடு செய்யப்படாமை, இனங்காணப்பட்ட சொத்துக்கள் 2020 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்யப்பட்டமை மற்றும் அமைச்சின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும் முப்படைகளுக்கும் உரிய சொத்துக்கள் ஆனமையால் அமைச்சின் சொத்தாக கணக்கீடு செய்ய முடியாதிருந்தமை போன்றவை இதற்கான காரணங்களாக இருந்தன. | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் கணப்படுகின்ற சொத்துக்களின் கைப்பற்றல் பெறுமதியும் பட்டோலைகளின் பிரகாரம் காண்பிக்கப்படுகின்ற அந்த பெறுமதியும் சமமாக இருக்க வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட | 2020 ஆம் ஆண்டில் இந்த அமைச்சிலிருந்து நீக்கப்பட்ட பிரிவுகளுக்குரிய நிலையான சொத்துக்கள் பாதுகாப்பு | ஆரம்ப மீதியை சரிசெய்ய வேண்டியிருந்ததுடன், ஆரம்ப மீதியில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் |

| | | |
|---|---|---|
| நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 9,143,240,909 ஆக இருந்ததுடன், 2020 இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ஆரம்ப மீதி ரூபா 27,480,074,788 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீதி முன்கொண்டுவரப்படும் போது ரூபா 18,336,833,879 மீதியில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுகளில் இடம்பெற்ற தவறுகளை சரிசெய்தல் மற்றும் மீளாய்வாண்டின் போது ஏனைய அமைச்சுக்களுக்கு சொத்துக்களை மாற்றுதல் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை ஆரம்ப மீதிக்கு சீராக்கியதால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | அமைச்சிலிருந்து அகற்றுதல் மற்றும் அமைச்சுக்குரிய சொத்துக்களின் ஆரம்ப மீதியை சரிசெய்தல் இந்த வேறுபாட்டிற்கான காரணமாக இருந்தது. | வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.3 எல்லையினை விஞ்சியமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10301 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கிற்காக விதிக்கப்பட்ட ஆகக் கூடிய செலவின எல்லை ரூபா 38,500,000 இருந்த போதிலும், உள்ளபடியான செலவினம் ரூபா 58,908,903 ஆனமையால் ஆகக்கூடிய செலவின எல்லையை விஞ்சி ரூபா 20,408,903 செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த எல்லையினை திருத்துதவற்காக திறைசேரிக்கு கோரப்பட்ட போதும், 2021 மார்ச் 03 ஆம் திகதி வரையிலும் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருந்தமை வெளிப்படுத்தப்படவில்லை. | எல்லையினை திருத்துவதற்கான அங்கீகாரம் கோரி 2021.05.12 ஆம் திகதி நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்ததாக தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் வாய் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எல்லையினை திருத்துவதற்கான அங்கீகாரம் தொடர்பாக தகவல்களை பெற்றுக் கொள்ளல் நிதி அமைச்சிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையை தயவுடன் மேலும் அறியத்தருகின்றோம். | முற்பண எல்லையினை பின்பற்றுதல் வேண்டும். |

**1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 454(1) பிரகாரம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் பொருட்பதிவேட்டு புத்தகம் (Inventory Book) பேணி செல்லப்படாது இருந்ததுடன் அரச புலனாய்வு சேவையின் யாழ்ப்பாண சபையின் 04 ஆம் இலக்க பேரேடும் சமப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 454(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 44 பொது மாதிரி படிவத்தின் பிரகாரம் பொருட் பதிவேட்டுப்புத்தகம் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கவேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணை பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப் பிரமாணம் 891(1) குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்கவேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடு பேணப்படவேண்டும். |

**1.6.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு | 2021 ஆம் ஆண்டு எதிர்காலத்தில் சரியான பிரகாரம் சமர்ப்பிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஐக்கிய நாடுகளின் சமாதான அமைதிப்படை பணிகளில் இருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ஐக்கிய அமெரிக்க டொலர் 24,082,696 ஆக இருந்ததுடன் இந்த நிலுவை வருமானத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர் 13,024,132 தொகை 01 வருடம் முதல் 04 வருடங்கள் வரையிலான கால வீச்சினைக் கொண்டிருந்தது. | தாமதமாக உள்ள படிகளை அறவிடுவதற்காக ஐக்கிய நாடுகள் நிரந்தர பிரதிநிதி அலுவலகத்தினால் உரிய பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சினால் பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | நிலுவை வருமானத்தை சரியான பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை விமானப்படையினால் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 1,740 மில்லியன் வருமானம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு எதிர்வுகூறப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 121.79 மில்லியன் மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை அறவிடும் செயல் முன்னேற்றம் 7 வீதமான கீழ்மட்டத்தில் காணப்பட்டது. மேலும் இலங்கை இராணுவம் மீளாய்வாண்டிற்கான வருமான மதிப்பீடு ஒன்று சமர்ப்பிக்க முடியாதிருந்தமையால் வருமான அறவிடல் செயற்திறனாக கணிப்பிட முடியாதிருந்தது. | காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையினால் சமாதான செயற்பாடுகளுக்கான கொடுப்பனவுகள் தாமதம் அடைவதற்கு தாக்கம் அளித்திருந்தது. எவ்வாறாயினும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக பாதுகாப்பு அமைச்சின் ஊடாக ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு முதல் இலங்கை இராணுவத்தின் வருமான மதிப்பீடு அரச நிதி கொள்கை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | நிதிப் பிரமாணம் 85(1), 85(2) மற்றும் 2015 யூலை 20 ஆம் திகதி 01/2015 ஆம் இலக்க அரசின் நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்வுகூறல்களுக்கான வருமான மதிப்பீடு அரச நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும் அமைச்சினால் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட வருமான குறியீடு 20.03.06.00- ஐக்கிய நாடுகளின் சமாதான அமைதிப்படை செயற்பாட்டு வருமான மதிப்பீட்டில் இலங்கை இராணுவத்தின் வருமான மதிப்பீடு உள்ளடக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் இலங்கை இராணுவத்தின் வருமான மதிப்பீடு அரச நிதி கொள்கை திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசு நிதிக்கொள்கை சுற்றறிக்கையின் (05) ஆம் பந்தி மற்றும் நிதிப் பிரமாணம் 128(2)(ஐ) இல் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் சந்தர்ப்ப சூழ்நிலையில் பொருளாதார நிலையில் மாற்றங்களை கருத்தில் கொண்டு இல்லாத ஒருவரின் சேவைகளுக்கு அறவிடும் கட்டணம் கால ரீதியில் திருத்த வேண்டியிருந்த போதும் 1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கி சட்டத்தின் (திருத்த) கீழ் அறவிடப்படும் துப்பாக்கி அனுமதிப்பத்திர கட்டணம் காலரீதியில் திருத்தப்பட்டிருக்கவில்லை. | 1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கி சட்டத்தின் திருத்தத்திற்கான வரைவு சட்டவரைவு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டணங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் வெடிபொருட்கள் மற்றும் துப்பாக்கி அனுமதிப்பத்திர கட்டணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள் தொடர்பாக 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவை வருமானம் ரூபா 421,890 ஆகும். இந்த நிலுவை வருமானம் காலரீதியில் அறவிடுவதற்கு என்பதற்கு திருப்திகரமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | துப்பாக்கி உரிமையாளர்கள் வெளிநாடு சென்றமை, மரணமடைந்தமை, தொழில்முயற்சிகளை கைவிட்டமை, துப்பாக்கிகள் தொடர்பான அறிவின்மை, வழக்கு பொருட்களாக துப்பாக்கி காணப்பட்டமை, ஊரடங்கு சட்டம் மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடு விதித்தமை, போன்றவை இதற்கான காரணங்களாக இருந்தன. | நிலுவை வருமானத்தை உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 2,430,300 நிதிஏற்பாடு முழுமையாக ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | அமைச்சுப் பதவியணியினருக்காக செலவின மதிப்பீடு செய்யப்பட்ட போதும் பாதுகாப்பு அமைச்சு பதவி அதிமேதகு ஜனாதிபதி ஆற்றியமையால் செலவினங்கள் பயன்படுத்தப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு இயலுமானவரை முழுமையாகவும், சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மூன்று செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 6,476,000 நிதிஏற்பாட்டைப் போன்று நான்கு மடங்கிற்கு அதிகமான நிதிஏற்பாடு அதாவது 26,025,465 தொகை நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் அந்த செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மாற்றப்பட்ட பின்னர் தேறிய நிதிஏற்பாட்டில் 48 வீதம் அதாவது ரூபா 15,503,187 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | இடைக்கால கணக்குகளின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு போதியளவாக இல்லாமையினால் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மேலதிக நிதிஏற்பாட்டை மாற்றவேண்டி ஏற்பட்டிருந்தமை மற்றும் கட்டிடங்களை திருத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாடு போதியளவில் இல்லாதிருந்தமை இதற்கான காரணமாகும். | நிதியேற்பாட்டை மாற்றும் போது சரியான முகாமைத்துவத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 09 மூலதன செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு கூட்டுமொத்தமாக ரூபா 27,575,000 தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் 07 மூலதன செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 17,067,690 நிதிஏற்பாடும், 07 | அமைச்சின் பதவியணியனர் அமைச்சில் ஸ்தாபிக்கப்படாமை மற்றும் கோவிட் தொற்றின் காரணமாக எதிர்பார்த்த பிரகாரம் செலவினங்கள் மேற்கொள்ளப்படாமை போன்றவை இதற்கான காரணமாகும். | தேவையினை சரியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டெழும் செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 21,161,878 நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 25 சதவீதத்திற்கும் 99 சதவீத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. | | |
| (ஈ) | ரூபா 10,504,800 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 03 மூலதன செலவினங்களுக்கு போதியளவு நிதி ஏற்பாடு காணப்படாமை மற்றும் அத்தியாவசிய செலவீனங்களை செய்தல் போன்ற காரணங்களை காண்பித்து நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 11,761,800 தொகையான நிதி ஏற்பாடு மாற்றப்பட்டு இருந்தபோதும் அவ்வாறு மாற்றப்பட்ட மொத்த நிதி ஏற்பாட்டையும் உள்ளடக்கிய ரூபா 13,719,362 நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | அமைச்சுப் பதவியணியினர் அமைச்சில் ஸ்தாபிக்கப்படாமை, கோவிட் தொற்று நிலைமையால் பெறுகை நடவடிக்கைகள் பாதிப்படைந்தமை, வெளிநாட்டு பிரயாணங்கள் வரையறுக்கப்பட்டமை, கட்டிட திருத்த நடவடிக்கைகள் தாமதமடைந்தமை போன்ற காரணங்களால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

---------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற அட்டவணை இலக்கம் (iii) மற்றும் (iv) இன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளின் | இது எதிர்காலத்தில் கவனத்திற்கொள்வதற்கு குறிக்கப்பட்டுள்ளது. | திறைசேரி கணனி அச்சிடல் குறிப்புடன் இணக்கஞ் செய்து சரியான பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுப்பெறுமதி ரூபா 573,999,564 ஆக இருந்ததுடன் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் காண்பிக்கப்படும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் அளவு 629,436,279 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 55,436,715 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்குமாயின் அந்த வேலைகள், சேவைகளை வழங்குவதற்காக எந்த ஒரு செலவினமோ அல்லது கடப்பாடோ மேற்கொள்ளப்பட முடியாது. அவ்வாறே 2017 ஏப்ரல் 22 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(ஈ) பந்தியின் பிரகாரம் ஏதாவது நிதி வருடத்துக்குரிய சகல பொறுப்புக்களும் அந்த ஆண்டின் போது பணம் செலுத்தி விடுவிக்க வேண்டி இருந்ததுடன் எந்த ஒரு பொறுப்பும் அடுத்துவரும் நிதியாண்டில் தீர்த்து வைக்கும் நோக்கில் முன்கொண்டு செல்ல முடியாது. எனினும் அமைச்சினால் வருடாந்த நிதிஏற்பாட்டை விஞ்சி 17 செலவின விடயங்களுக்குரிய ரூபா 47,991,066 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 04 இடைக்கால கணக்குகளின் கீழ் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் திருத்தங்கள் மேற்கொண்டமை மற்றும் கொவிட் 19 தொற்று நோய் காரணமாக மீண்டெழும் செலவினங்கள் உயர்வடைந்து சென்றமையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 ஆம் ஆண்டில் சனவரி மாத கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது 2020 ஆம் ஆண்டிற்குரிய 13 சந்தர்ப்பங்களில் ரூபா 3,742,387 கூட்டுத் தொகையான செலவினங்கள் 2021 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடுகளில் இருந்து செலவிடப்பட்டு இருந்தபோதிலும் அந்த செலவினங்கள் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் பொறுப்பாக இனம் காணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,742,393 தொகையான பொறுப்புகள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பொறுப்புக் கூற்றுக்களுக்காக கடந்த ஆண்டிற்குரிய சகல கொடுப்பனவுகளையும் உள்ளடக்குவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | பொறுப்புகள் உரியவாறு இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காணப்படவேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 751(1) | தேசிய மாணவ படையணியின் மன்னார், குருநாகல் மற்றும் புத்தளம் என்ற 03 முகாம்களில் 03 வாகனங்கள் பொருட்பதிவேட்டுப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2015 ஒக்டோபர் 9 ஆம் திகதிய PED/RED/2015/8/பொது(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிகாட்டி கோவையின் இலக்கம் 01. | இடமாற்றம் பெற்று சென்றுள்ள, மரணமடைந்த, ஓய்வுபெற்றுச் சென்றுள்ள, வேலை நீக்கம் செய்யப்பட்ட, வேலையை விட்டுச் சென்ற மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடம் இருந்து 2020 திசெம்பர் 31 உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதி 5,136,145 ஆக இருந்ததுடன் அந்தக் கடன் மீதில் உள்ளடங்கியுள்ள 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 2,751,519 ஆகும். இந்த காலாவதியான கடன் மீதி தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன் மீதி 20 வருடங்களுக்கு மேற்பட்ட மேற்பட்ட காலம் நிலுவையான கடன் பணமாக இருந்ததுடன் அதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---

**3.1 திட்டமிடல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் அமைச்சின் கீழ் வருகின்ற இரண்டு வருமான குறியீடுகளுக்கு அண்ணளவாக ரூபா 1,820 மில்லியன் வருடாந்த வருமானமொன்றை பெற்றுக்கொள்ள மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் முன்னைய அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் | சுற்றறிக்கையின் பிரகாரம் வருமான சேகரித்தல் விபரம் 2021 இன் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இந்த வருமானத்தை சேகரிக்கும் காலப்பகுதி மற்றும் அதற்கு நேரொத்த செயலாற்றல் மட்டத்தை காண்பித்து செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரித்து வருடாந்த செயல் நடவடிக்கை தீட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . | | |
| (ஆ) | முன்னைய சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவை திட்டமொன்று உள்ளடக்கப்பட வேண்டி இருந்த போதும் அவ்வாறு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த போதிலும் இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட கணக்கின் மூலம் கட்டுநிதி திட்டம் தயாரிக்கப்பட்டு பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்து கட்டுநிதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவை திட்டமொன்று உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேணடிய உள்ளக கணக்காய்வு திட்டம், உரிய ஆண்டிற்குரிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் விவரங்கள் போன்றவை வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் நிறுவன கட்டமைப்பு மற்றும் பதவியணியினர் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பாதுகாப்பு இராணுவ தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் | | |
| i. பாதுகாப்பு இராணுவ தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற் திட்டத்தை நிர்மாணிப்பது இரண்டு கட்டங்களில் திட்டமிடப்பட்டிருந்ததுடன் நிர்மாண கட்டம் 01 இன் கீழ் மீளாய்வாண்டில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்ட இலக்கம் 08 என்ற கட்டிடம் தொலைத்தொடர்பு கட்டிடம் மற்றும் பாதுகாப்பு கட்டிடம் என்ற கட்டிடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட இலக்கை பூர்த்தி செய்வதில் தாமதம் அவதானிக்கப்பட்டது. மேலும் நிர்மாணக் கட்டம் 01 இன் கீழ் வருகின்ற பிரதான கட்டிடத் தொகுதி, தொலைத்தொடர்பு கட்டிடம், பாதுகாப்பு கட்டிடம், நீர் வழங்கல் முறைமை மற்றும் நீர் பம்பிக்கூடத்தின் நிர்மாணத்தின் கீழ் பிரதான 96 பணிகள் எனடபன இனங்காணப்பட்டதுடன் அதில் 31 பணிகள் 2020 ஆம் ஆண்டில் எந்த ஒரு பௌதீக செயல் முன்னேற்றத்தையும் பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பல்வேறு காரணங்களால் மெதுவாக மேற்கொள்ளப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளில் அனேகமானவை தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. அவ்வாறே கொவிட் 19 தொற்றின் காரணமாக பாதிப்பிற்கு உள்ளாகியிருந்த போதும் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ள வேண்டியமை மற்றும் ஒப்பந்த மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்கள் உரியவாறு அமுல்படுத்தி ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 10,008.62 மில்லியன் முதலீடு செய்யப்பட்டு 08 முன்னுரிமை கட்டங்களின் கீழ் 25 ஒப்பந்த பணிகளையும், 356 வெளி ஒப்பந்த பணிகளையும் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு இருந்தபோதும் மீளாய்வாண்டின் போது 146 பணிகள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தம் 57.92 வீத சராசரியான முன்னேற்றத்தை பெற்றிருந்தது. ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் இலக்கம் 08 மற்றும் இராணுவ தலைமையக கட்டிடத்திற்காக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. முன்னுரிமை கட்டம் 5 இனது ஒப்பந்தங்கள் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் அமுல்படுத்த முடியாது இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படும். | திட்டமிடப்பட்ட பிரகாரம் ஒப்பந்த பணிகள் அமுல்படுத்தப்பட வேண்டும். |
| iii. | கீன்ஹதெனிய கட்டம் 01 இற்குரிய மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 349.24 மில்லியன் தொகையான நிர்மாணம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததடன் மீளாய்வாண்டில் பாதீட்டு நிதிஏற்பாடாக ரூபா 191.45 மில்லியன் மாத்திரம் கிடைத்திருந்தது. அதாவது அந்த நிதிஏற்பாட்டில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 70.97 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்படடிருந்தமையி னால் அந்த பணிகளின் பௌதீக செயல்முன்னேற்றம் முறையே 37 சதவீதம் மற்றும் 14 சதவீதம் ஆன கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | தொற்றுநோய் நிலைமை காரணமாக நிர்மாண ஊழியர்களின் அளவை குறைக்க வேண்டி ஏற்பட்டமை, பொருட்களை பெற்றுக்கொள்ளும் போது ஏற்பட்ட கஷ்டம், பிணை முறிகளின் தாமதம், பெறுகைகளின் தாமதம் மற்றும் இறக்குமதி தாமதம் போன்றன இதற்கான காரணமாக இருந்தது. | நிதி ஏற்பாட்டில் பயன்படுத்தி நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்றத்தை எதிர்பார்த்த பிரகாரம் கைப்பற்றுதல் வேண்டும். |

(ஆ) உபாய வழி பாதுகாப்பு, தொலைத்தொடர்பு வலைப்பின்னல் திட்டம்

-------------------------------------------

பாதுகாப்பு சேவைகள் இடையே பொது தொடர்பாடல் பொறிமுறையை ஏற்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட உபாய வழி பாதுகாப்பு தொலைத்தொடர்பு வலைப்பின்னல் செயற்திட்டம் 2014 – 2016 ஆம் ஆண்டு காலத்தில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2019 நவம்பர் 11 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதிவரை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2020 இன் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் ரூபா 882.75 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டு தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிர்மாணம், மைக்ரோ போட்டி வானொலி அலைமுறையை ஸ்தாபித்தல் மற்றும் அமுலாக்கல், அக்குரே வரை ஒலிபரப்பு அலைகளை ஏற்படுத்தல் மற்றும் கொழும்பு நகர பாதுகாப்பு தொலைத்தொடர்பு வலையமைப்பை முழுமையாக பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் இந்த நிர்மாணங்களுக்குரிய பெறுகைகள் தாமதம் அடைந்ததால் தொடர்ந்தும் செயறதறிட்ட காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அதனால் செயற்திட்டத்தின் நோக்கம் காலரீதியில் நிறைவேற்ற முடியாதிருந்தது. மேலும் நிர்வாக ரீதியில்

கேள்வியை இரத்து செய்து மீண்டும் பெறுகை நடவடிக்கைகளுக்காக 2022.12.31 வரை செயற்திட்டத்தின் காலத்தை நீடிக்கும் அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. 22 ஒலித்தடவை மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் உபாய வழி பாதுகாப்பு வலைப்பின்னல் முறைமையில் 21 இடங்களில் அமைக்கப்பட்டிருந்ததுடன் கொட்டகை நிர்மாணமும் 2020.12.31 இல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்டுள்ள கோபுரங்கள், துணை பாகங்களின் மேடை 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட 22 மின்பிறப்பாக்கி இயந்திரங்களை உள்ளடக்கிய உபகரணங்கள் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்துதல் தொடர்ந்தும் தாமதமடைந்து காணப்பட்டது.

### 3.3 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்மாணங்களில் தாமதம், நாணயக் கடிதங்களை திறத்தலில் தாமதம் ஏற்பட்டமை போன்ற விடயங்களால் எதிர்பார்த்த காலத்தில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணமாக ஒப்பந்த காலஎல்லை நீக்கப்பட்ட 07 ஒப்பந்தங்கள் காணப்பட்டன. அவற்றுக்குரிய வழங்கல் ஐந்து பேரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 1,008,548,800 தொகை மற்றும் அமெரிக்க டொலர் 4,445,076 தொகை காலநீட்டிப்புக்கு உரித்து கோரல் (Claims for EOT)) 24 பேருக்கு மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்டதுடன் அதில் ஒப்பந்தக்காரர்கள் இரண்டு பேருக்கு ரூபா 8,640,502 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரரால் சமர்பிக்கப்பட்ட நிதி அளவின் சரியான தன்மை ஆலோசனை சேவை நிறுவனத்தின் பரிந்துரை மற்றும் பாதுகாப்பு அமைச்சு அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ளது. உரித்து கோரல்களின் சரியான தன்மையை பரிசீத்து பரிந்துரை ஆலோசனை நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தேவையற்ற தாமதங்களின் காரணமாக ஏற்படுகின்ற மேலதிக உரித்து கோரல்களை குறைத்துக் கொள்வதன் மூலம் சிக்கனமற்ற செலவினங்களை குறைத்துக்கொள்ள வேண்டும். |

4. **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.**

---

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| 2018 மார்ச் 16 ஆம் திகதிய பீஎஸ்/எஸ்பீ/எஸ்பீ/3/201 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்வதற்காக முறைமை ஒன்றை ஏற்படுத்தி இலக்கை அடைந்து கொள்ளல் தொடர்பான சரியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்ளல் குறித்துரைத்த தரவு முறைக்கு அண்மித்த அளவிடல்கள் சரியான முறையில் மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைந்து நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

5. **மனித வள முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணியில் 481 பதவிகளில் 74 பதவிகளில் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. அதில் 13 வெற்றிடங்கள் சிரேஷ்ட நிலைக்குரிய பதவிகள் ஆகும். | வெற்றிடங்களை எதிர்காலத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | போதியளவிலான பதவியணியினர் பேணிச்செல்லப்பட வேண்டும். |